# Padasalai's Telegram Groups!

( தலைப்பிற்கு கீழே உள்ள லிங்கை கிளிக் செய்து குழுவில் இணையவும்! )

- Padasalai's NEWS - Group

https://t.me/joinchat/NIfCqVRBNj9hhV4wu6_NqA

- Padasalai's Channel - Group

https://t.me/padasalaichannel

- Lesson Plan - Group

https://t.me/joinchat/NIfCqVWwo5iL-21gpzrXLw

- 12th Standard - Group

https://t.me/Padasalai_12th

- 11th Standard - Group

https://t.me/Padasalai_11th

- 10th Standard - Group

https://t.me/Padasalai_10th

- 9th Standard - Group

https://t.me/Padasalai_9th

- 6th to 8th Standard - Group

https://t.me/Padasalai_6to8

- 1st to 5th Standard - Group

https://t.me/Padasalai_1to5

- TET - Group

https://t.me/Padasalai_TET

- PGTRB - Group

https://t.me/Padasalai_PGTRB

- TNPSC - Group

https://t.me/Padasalai_TNPSC

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
For Full Book Order Online and Available at All Leading Bookstores

சுராவின்

# தமிழ் உரைநூல்

## 8ஆம் வகுப்பு

2019–20 ஆம் ஆண்டுக்கான புதிய பாடத்திட்டத்தின்படி, தயாரிக்கப்பட்டுள்ளது.

## இரண்டாம் பருவம்

**சிறப்பம்சங்கள்**

- பாடப்பகுதிகளிலுள்ள எல்லா பிரிவுகளிலும், விரிவான விளக்கங்களுடன் கூடிய விடைகள் கொடுக்கப்பட்டுள்ளன.
- மதிப்பீடு, இலக்கணம், மொழியை ஆள்வோம், மொழியோடு விளையாடு, கற்பவை கற்றபின், கூடுதல் வினா விடைகள் ஆகியவை தரப்பட்டுள்ளன.
- மூன்று அலகு தேர்வு வினாத்தாள் கொடுக்கப்பட்டுள்ளன.

சுரா பப்ளிகேஷன்ஸ்
சென்னை

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 / 8124301000

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
For Full Book Order Online and Available at All Leading Bookstores

**2019-20 புதிய பதிப்பு**
**© வெளியீட்டாளர்கள்**

ISBN : **978-81-8449-579-9**
**குறியீட்டு எண் : T2-8-T**

எழுதி வழங்கியவர்
**கி. லதா,** M.A., B.Ed., M.Phil.,

**தலைமை அலுவலகம்:**
1620, 'ஜே' பிளாக், 16-ஆவது
பிரதான சாலை, அண்ணா நகர்,
சென்னை-600 040.
☎ 91-44-26161088, 26161099
**e-mail** : enquiry@surabooks.com
**website :** www.surabooks.com

**Our Guides for XI, XII Standard**

- Sura's Tamil
- Sura's English
- Sura's Mathematics (EM/TM )
- Sura's Physics (EM/TM)
- Sura's Chemistry (EM/TM)
- Sura's Biology (EM/TM)
- Sura's Computer Science (EM/TM)
- Sura's Commerce (EM/TM)
- Sura's Economics (EM/TM)
- Sura's Accountancy (EM/TM)
- Sura's Business Maths (EM)

Also available Sigaram Thoduvom mini guide (EM/TM) for all Subjects.

# பதிப்பாசிரியர் உரை...

**எங்கள் வாழ்த்திற்குரிய**
**இனிய மாணவ செல்வங்களே!**

உங்களை வெற்றிப் பாதையில் அழைத்துச் செல்லும் வழிகாட்டி **'சுராவின் தமிழ் உரைநூல்'** ஆகும். புதிதாக திருத்தியமைக்கப்பட்ட பாடநூல் 2019ன்படி உருவாக்கப்பட்டுள்ள **சுராவின் 8ஆம் வகுப்பு - தமிழ் உரைநூல் - இரண்டாம் பருவ** வழிகாட்டியை உங்களிடம் சேர்ப்பதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறோம்.

புதிய தேர்வுத்திட்டத்தின்படி, 8ஆம் வகுப்பு தேர்வுகளில் நீங்கள் அதிக மதிப்பெண் பெற சரியான விடைகளுடன், எளிய முறையில் இந்த வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர்களின் கற்றுத்தரும் பணியில் உறுதுணையாகவும், மாணவர்கள் பாடங்களைக் கற்கும் விதத்தில் ஊக்கம் தரும் வகையிலும் நமது வழிகாட்டி திகழும் என நம்புகிறோம்.

இறையருளை வேண்டுகிறோம்.
நலமே விளைக!

- பதிப்பகத்தார்
**சுபாஷ் ராஜ்,** B.E., M.S.,
(சுரா பதிப்பகம்)

மேலும் விவரங்களுக்கு / தொடர்புக்கு
புத்தகத்தில் உள்ள சந்தேகங்களுக்கு : enquiry@surabooks.com
புத்தகங்கள் வாங்க : orders@surabooks.com
தொடர்புக்கு : 96001 75757 / 8124301000
வாட்ஸ்அப் : 8124201000 / 9840926027
**ஆன்லைன் வலைதளம்** : www.surabooks.com
பாடக் குறிப்புகளின் தொகுக்கப்பட்ட பகுதிகளை எமது http://tnkalvi.in இணையதளத்திலிருந்து இலவசமாக பதிவிறக்கிக்கொள்ளலாம்



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 / 8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
For Full Book Order Online and Available at All Leading Bookstores

# பொருளடக்கம்


மனப்பாடச் செய்யுள் பகுதி ........ V

## இயல் -1

| | | |
|---|---|---|
| கல்வி | கல்வி அழகே அழகு (கவிதைப்பேழை) | 1 |
| | புத்தியைத் தீட்டு(கவிதைப்பேழை) | 4 |
| | பல்துறைக் கல்வி (உரைநடை உலகம்) | 7 |
| கல்வி கரையில | ஆன்ற குடிப்பிறத்தல் (விரிவானம்) | 13 |
| | வேற்றுமை (கற்கண்டு) | 15 |
| | அலகு தேர்வு -1 | 28 |

## இயல் -2

| | | |
|---|---|---|
| கலை, அழகியல், பண்பாடு | திருக்கேதாரம் (கவிதைப்பேழை) | 29 |
| | பாடறிந்து ஒழுகுதல் (கவிதைப்பேழை) | 34 |
| | நாட்டுப்புறக் கைவினைக் கலைகள் (உரைநடை உலகம்) | 38 |
| குழலினிது யாழினிது | தமிழர் இசைக்கருவிகள் (விரிவானம்) | 45 |
| | தொகைநிலை, தொகாநிலைத்தொடர்கள் (கற்கண்டு) | 47 |
| | திருக்குறள் (வாழ்வியல்) | 59 |
| | அலகு தேர்வு -2 | 62 |

## இயல் -3

| | | |
|---|---|---|
| அறிவியல், தொழில்நுட்பம் | வளம் பெருகுக (கவிதைப்பேழை) | 63 |
| | மழைச்சோறு (கவிதைப்பேழை) | 67 |
| | கொங்குநாட்டு வணிகம் (உரைநடை உலகம்) | 71 |
| உடலை ஓம்புமின் | காலம் உடன் வரும் (விரிவானம்) | 79 |
| | புணர்ச்சி (கற்கண்டு) | 81 |
| | அலகு தேர்வு -3 | 90 |




orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 / 8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
For Full Book Order Online and Available at All Leading Bookstores

# மனப்பாடச் செய்யுள்

**இயல் - 1**

## கல்வி அழகே அழகு

கற்றோர்க்குக் கல்வி நலனே கலனல்லால்
மற்றோர் அணிகலம் வேண்டாவாம் - முற்ற
முழுமணிப் பூணுக்குப் பூண்வேண்டா யாரே
அழகுக்கு அழகுசெய் வார்.

- குமரகுருபரர்

**இயல் - 2**

## பாடறிந்து ஒழுகுதல்

ஆற்றுதல் என்பது ஒன்று அலந்தவர்க்கு உதவுதல்
போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை
பண்பு எனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்
அன்பு எனப்படுவது தன்கிளை செறாஅமை
அறிவு எனப்படுவது பேதையார் சொல் நோன்றல்
செறிவு எனப்படுவது கூறியது மறாஅமை
நிறை எனப்படுவது மறை பிறர் அறியாமை
முறை எனப்படுவது கண்ஓடாது உயிர் வௌவல்
பொறை எனப்படுவது போற்றாரைப் பொறுத்தல்.

## திருக்குறள்

### தெரிந்து வினையாடல்

2. இதனை இதனால் இவன்முடிக்கும் என்றுஆய்ந்து
அதனை அவன்கண் விடல்.

### சொல்வன்மை

7. கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல்.

8. சொல்லுக சொல்லைப் பிறிதுஓர்சொல் அச்சொல்லை
வெல்லும்சொல் இன்மை அறிந்து.


- திருவள்ளுவர்

☆ ☆ ☆



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 / 8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
For Full Book Order Online and Available at All Leading Bookstores






orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 / 8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
For Full Book Order Online and Available at All Leading Bookstores

கல்வி கரையில

இயல் 1

# கல்வி அழகே அழகு

கவிதைப்பேழை

## ஆசிரியர் குறிப்பு

குமரகுருபரர் பதினேழாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். இவர் தமிழ்மொழிக்குப் பெருமை சேர்க்கும் பல சிற்றிலக்கியங்களைப் படைத்துள்ளார். கந்தர் கலிவெண்பா, கயிலைக் கலம்பகம், சகலகலாவல்லி மாலை, மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் ஆகியன அவற்றுள் சிலவாகும்.

மக்களின் வாழ்வுக்குத் தேவையான நீதிகளைச் சுட்டிக்காட்டுவதால் இந்நூல் நீதிநெறி விளக்கம் எனப் பெயர் பெற்றது. கடவுள் வாழ்த்து உட்பட 102 வெண்பாக்கள் இந்நூலில் உள்ளன. இந்நூலின் பதின்மூன்றாம் பாடல் நமக்குப் பாடப்பகுதியாகத் தரப்பட்டுள்ளது.



## பாடலின் பொருள்

ஒளிரும் மணிகளால் செய்யப்பட்ட அணிகலனுக்கு மேலும் அழகூட்ட வேறு அணிகலன்கள் தேவையில்லை; அதுபோலக் கல்வி கற்றவர்க்கு அவர் கற்ற கல்வியே அழகு தரும். ஆகையால் அழகு சேர்க்கும் பிற அணிகலன்கள் அவருக்குத் தேவையில்லை.

## மதிப்பீடு

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. **கற்றவருக்கு அழகு தருவது ...................... .**

அ) தங்கம் ஆ) வெள்ளி

இ) வைரம் ஈ) கல்வி [விடை: ஈ) கல்வி]

2. **'கலனல்லால்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ...................... .**

அ) கலன் + லல்லால் ஆ) கலம் + அல்லால்

இ) கலன் + அல்லால் ஈ) கலன் + னல்லால்

[விடை: இ) கலன் + அல்லால்]

### சொற்றொடரில் அமைத்து எழுதுக

1. அழகு – பெண்களுக்கு அணிகலன்களை விட புன்னகையே அழகு தரும்.
2. கற்றவர் – கற்றவர்களுக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு கிடைக்கும்.
3. அணிகலன் – ஐம்பெருங்காப்பியங்கள் தமிழன்னைக்கு அணிகலன்களாகத் திகழ்கின்றன.



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 / 8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
For Full Book Order Online and Available at All Leading Bookstores


## குறுவினா

**யாருக்கு அழகு செய்ய வேறு அணிகலன்கள் தேவையில்லை?**

கல்வி கற்றவர்க்கு அவர் கற்ற கல்வியே அழகு தரும். ஆகையால் அவருக்கு அழகு சேர்க்கும் பிற அணிகலன்கள் தேவையில்லை.

## சிறுவினா

**நீதிநெறி விளக்கப்பாடல் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.**

**நீதிநெறி விளக்கப்பாடல் கூறும் கருத்துகள் :**

(i) ஒளிரும் மணிகளால் செய்யப்பட்ட அணிகலனுக்கு மேலும் அழகூட்ட வேறு அணிகலன்கள் தேவையில்லை.

(ii) அதுபோலக் கல்வி கற்றவர்க்கு அவர் கற்ற கல்வியே அழகு தரும்.

(iii) ஆகையால் அழகு சேர்க்கும் பிற அணிகலன்கள் அவருக்குத் தேவையில்லை

## சிந்தனை வினா

**கல்வியின் பயன்களாக நீங்கள் கருதுவனவற்றை எழுதுக.**

(i) அறியாமையைப் போக்கி அறிவை விரிவாக்கும்.

(ii) அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நால்வகைப் பயனையும் பெறலாம்.

(iii) கவலையின்றி வாழத் துணைபுரியும்.

(iv) கல்வி கற்பதனால் வாழ்க்கையில் எதிர்ப்படும் இடர்களை விரட்ட முடியும்.

(v) கல்வியால் நாட்டில் நன்னெறி படரும்.

(vi) கல்வியால் மக்கள் மாண்புறுவர்.

## கற்பவை கற்றபின்

1. **கல்வி குறித்து வழங்கப்படும் பழமொழிகளைத் தொகுத்து எழுதுக.**

(i) அறிய அறியக் கெடுவார் உண்டா?

(ii) இளமையிற் கல்வி கல் மேல் எழுத்து.

(iii) கசடறக் கல்லார்க்கு இசை உறல் இல்லை.

(iv) கல்லாதவரே கண்ணில்லாதவர்.

(v) கல்வி இல்லாச் செல்வம் கற்பில்லா அழகு.

2. **கற்றோரின் சிறப்புகளைப் பற்றிப் பிற நூல்களில் இடம்பெற்ற பாடல்களைத் தொகுத்து எழுதுக.**

**அறிவுடையார் தாமே உணர்வர்**

பூவாது காய்க்கும் மரம் உள; நன்று அறிவார்,

மூவாது மூத்தவர், நூல் வல்லார்; தாவா,




orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 / 8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
For Full Book Order Online and Available at All Leading Bookstores


கல்வி கரையில

இயல் 1

# பல்துறைக் கல்வி

உரைநடை உலகம்

## மதிப்பீடு

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. அறியாமையை நீக்கி அறிவை விளக்குவது ........................ .

அ) விளக்கு ஆ) கல்வி
இ) விளையாட்டு ஈ) பாட்டு [விடை: ஆ) கல்வி]

2. கல்விப் பயிற்சிக்குரிய பருவம் ........................ .

அ) இளமை ஆ) முதுமை
இ) நேர்மை ஈ) வாய்மை [விடை: அ) இளமை]

3. இன்றைய கல்வி ........................ நுழைவதற்குக் கருவியாகக் கொள்ளப்பட்டு வருகிறது.

அ) வீட்டில் ஆ) நாட்டில்
இ) பள்ளியில் ஈ) தொழிலில் [விடை: ஈ) தொழிலில்]

### நிரப்புக

1. கலப்பில் ............. உண்டென்பது இயற்கை நுட்பம். [விடை: வளர்ச்சி]
2. புற உலக ஆராய்ச்சிக்கு ............... கொழுகொம்பு போன்றது. [விடை: அறிவியல்]
3. வாழ்விற்குரிய இன்பத்துறைகளில் தலையாயது ............... இன்பம் ஆகும். [விடை: காவிய]

### பொருத்துக

1. இயற்கை ஓவியம் – சிந்தாமணி
2. இயற்கைத் தவம் – பெரியபுராணம்
3. இயற்கைப் பரிணாமம் – பத்துப்பாட்டு
4. இயற்கை அன்பு – கம்பராமாயணம்

விடை :

1. இயற்கை ஓவியம் – பத்துப்பாட்டு
2. இயற்கைத் தவம் – சிந்தாமணி
3. இயற்கைப் பரிணாமம் – கம்பராமாயணம்
4. இயற்கை அன்பு – பெரியபுராணம்




Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
For Full Book Order Online and Available at All Leading Bookstores


(iii) குறிப்பிட்ட பாடங்களை நெட்டுருச் செய்து, தேர்வில் தேறிப் பட்டம் பெற்று, ஒரு தொழிலில் நுழைவதற்குக் கல்வி ஒரு கருவியாகக் கொள்ளப்பட்டு வருகிறது.

(iv) நாளடைவில் அக்கல்விக்கும் வாழ்விற்கும் தொடர்பில்லாமல் போகிறது. இது கல்வியாகாது என்று திரு.வி.க. கூறுகிறார்.

**4. இசைக்கல்வி பற்றித் திரு.வி.க. கூறுவன யாவை?**

(i) இன்றைய சூழலில் இசைப்பயிற்சியும் இன்றியமையாதது. இசை பாட இயற்கை சிலருக்குத் துணை செய்யும்; சிலருக்கு துணை செய்வதில்லை. அத்துணை பெறாதார் இசை இன்பத்தையாதல் நுகரப் பயில்வாராக.

(ii) பழைய தமிழர் இசைத்துறையின் நிலை கண்டவர் என்று ஈண்டு இறுமாந்து கூறுகிறேன்.

(iii) தமிழ் யாழையும் குழலையும் என்னென்று சொல்வது? அந்த ழகரங்களை நினைக்கும் போதே அமிழ்தூறுகிறது. கொடிய காட்டு வேழங்களையும் பாணர் தம் யாழ் மயக்குறச் செய்யுமாம்.

(iv) அந்த யாழ் எங்கே? இனி இசைப் புலவர்தொகை நாட்டிற் பெருகப் பெருக நாடு பல வழியிலும் ஒழுங்கு பெறுதல் ஒருதலை. ஆகவே அத்துறை மீதும் மாணவர் கருத்துச் செலுத்த வேண்டும்.

**5. திரு.வி.க. இயற்றிய நூல்கள் யாவை?**

(i) மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்

(ii) பெண்ணின் பெருமை

(iii) தமிழ்ச்சோலை

(iv) பொதுமை வேட்டல்

(v) முருகன் அல்லது அழகு

(vi) இளமை விருந்து.

☆ ☆ ☆




orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 / 8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
For Full Book Order Online and Available at All Leading Bookstores


கல்வி கரையில

இயல் 1

# ஆன்ற குடிப்பிறத்தல்

விரிவானம்

## மதிப்பீடு

1. **திருக்குறளின் கருத்தைப் பின்பற்றி நடந்த சகாதேவன் கதையைச் சுருக்கி எழுதுக.**

**முன்னுரை :**

குறள் வழிக் கதை மூலம் மாணவன் ஒருவன் நடந்து கொண்ட விதமும் ஊராரின் எண்ணங்களும் ஆசிரியரின் நல்ல முடிவு பற்றியும் இக்கட்டுரையில் காண்போம்.

**ஆசிரியரின் வேட்டி :**

ஆசிரியர் ஒருநாள் தனது வேட்டியைத் துவைத்து கொடிக் கயிற்றில் காயப் போட்டுவிட்டுப் பள்ளிக்குச் சென்றார். பிறகு வந்து பார்த்தபோது வேட்டியைக் காணவில்லை. ஊராரில் சிலர் சிகாமணிதான் எடுத்திருப்பார் என்று சந்தேகத்துடனும் சிலர் உறுதியுடனும் கூறினர். சிகாமணியின் தந்தையும் பிறர் பொருளை எடுத்துக் கொள்ளும் குணம் கொண்டவர். அதனால் அவரது பழக்கம் இவரைத் தொற்றிக் கொண்டது என்றனர்.

**வகுப்பறையில் ஆசிரியர் :**

ஆசிரியருக்கு வேட்டியின் மர்மம் விளங்கவில்லை. அன்று வகுப்பறையில் 'பண்புடைமை' என்ற அதிகாரத்திலுள்ள குறட்பாவை நடத்தத் தொடங்கினார். 'ஆன்ற குடிபிறத்தல்' என்ற தொடருக்குப் பொருள் கூறும்போது வகுப்பிலிருந்த சிகாமணியின் மகன் சகாதேவன் ஆசிரியரை கூர்ந்து நோக்கினான். ஆசிரியரும் அவனை அடிக்கடி பார்த்தார்.

**குறள்வழி அறிவுரை :**

" 'ஆன்ற குடிப்பிறத்தல்' என்றால் சிறந்த குடி உன்னிடமிருந்து தொடங்கட்டும். அப்பன் திருடனாயிருக்கலாம். மகன் நல்லவனாக இருப்பான். அவங்க அப்பனைச் சொல், திருடன்தான்! அவன் பையனைச் சொல்லாதே, அவன் மிக நல்லவன் என்று உலகோர் பேசுவர். அதுபோல் கெட்டப்பழக்கங்கள் தந்தையுடன் செல்லட்டும். உன்னிலிருந்து நல்ல புதிய குடி உதிக்கட்டும்" என்றார். மேலும் "ஒழுக்கம் இல்லாத பரம்பரையில் நீ வந்திருந்தாலும் ஒழுக்கத்தின் உறைவிடமாக நீ இருக்கவேண்டும்" என்று கூறினார்.

**உணவு இடைவேளை :**

உணவு இடைவேளையில் ஆசிரியர் வீட்டிற்குச் சென்றார். அப்போது கிருஷ்ணமூர்த்தி என்ற மாணவன் சகாதேவன் கொடுக்கச் சொன்னதாக வேட்டியைக் கொடுத்தான். பிறகு 'வேட்டியைச் சிகாமணிதான் எடுத்தார் என்றும் தானே ஆசிரியரிடம் கொடுப்பதற்கு வெட்கப்படுவதாகவும், சகாதேவன் கூறியதாகக் கூறினான்.


Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
For Full Book Order Online and Available at All Leading Bookstores


கல்வி கரையில

இயல் 1

# வேற்றுமை

கற்கண்டு

## மதிப்பீடு

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. **பெயர்ச்சொல்லின் பொருளை வேறுபடுத்துவது ................. ஆகும்.**
   அ) எழுவாய் ஆ) செயப்படுபொருள்
   இ) பயனிலை ஈ) வேற்றுமை **[விடை: ஈ) வேற்றுமை]**
2. **எட்டாம் வேற்றுமை ..................... வேற்றுமை என்று அழைக்கப்படுகிறது.**
   அ) எழுவாய் ஆ) செயப்படுபொருள்
   இ) விளி ஈ) பயனிலை **[விடை: இ) விளி]**
3. **உடனிகழ்ச்சிப் பொருளில் ..................... வேற்றுமை வரும்.**
   அ) மூன்றாம் ஆ) நான்காம்
   இ) ஐந்தாம் ஈ) ஆறாம் **[விடை: அ) மூன்றாம்]**
4. **'அறத்தான் வருவதே இன்பம்' - இத்தொடரில் ..................... வேற்றுமை பயின்று வந்துள்ளது.**
   அ) இரண்டாம் ஆ) மூன்றாம்
   இ) ஆறாம் ஈ) ஏழாம் **[விடை: ஆ) மூன்றாம்]**
5. **'மலர் பானையை வனைந்தாள்' - இத்தொடர் ..................... பொருளைக் குறிக்கிறது.**
   அ) ஆக்கல் ஆ) அழித்தல்
   இ) கொடை ஈ) அடைதல் **[விடை: அ) ஆக்கல்]**

### பொருத்துக

1. மூன்றாம் வேற்றுமை - இராமனுக்குத் தம்பி இலக்குவன்.
2. நான்காம் வேற்றுமை - பாரியினது தேர்.
3. ஐந்தாம் வேற்றுமை - மண்ணால் குதிரை செய்தான்.
4. ஆறாம் வேற்றுமை - ஏவுதல் கலையில் சிறந்தவன் ஏகலைவன்.

**விடை :**

1. மூன்றாம் வேற்றுமை - மண்ணால் குதிரை செய்தான்.
2. நான்காம் வேற்றுமை - இராமனுக்குத் தம்பி இலக்குவன்.
3. ஐந்தாம் வேற்றுமை - ஏவுதல் கலையில் சிறந்தவன் ஏகலைவன்.
4. ஆறாம் வேற்றுமை - பாரியினது தேர்


Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
For Full Book Order Online and Available at All Leading Bookstores


# மொழியை ஆள்வோம்

## கேட்க

**கல்வியின் சிறப்புகளை விளக்கும் கதைகளைக் கேட்டு மகிழ்க.**

மாணவர்கள் தாங்களாகவே கல்வியின் சிறப்புகளை விளக்கும் கதைகளைக் கேட்டு மகிழ வேண்டும்.

## கீழ்க்காணும் தலைப்புகளில் இரண்டு நிமிடம் பேசுக.

### கல்வியே அழியாச் செல்வம்

அனைவருக்கும் வணக்கம்!

நான் கல்வியே அழியாச் செல்வம் என்ற தலைப்பில் பேசவிருக்கிறேன். கல்வி இன்றைய மக்களின் வாழ்வாதாரமாக உள்ளது. அத்தகைய கல்வியைக் கற்பதில் ஆண், பெண் என்ற பாகுபாடின்றி அனைவரும் சமம் என்ற நிலையில் உள்ளது.

'கல்வி இல்லாத பெண்கள் களர்நிலம்' என்று பாரதிதாசன் பெண்களின் கல்வி பற்றிக் கூறுகிறார்.

'கற்றவரைக் கண்ணுடையார்' என்றும் 'கல்லாதவரை முகத்தில் இரண்டு புண்ணுடையவர்' என்றும் இடித்துரைக்கிறார் வள்ளுவர். கற்றோர்க்கு அணிகலன் கல்வியே; கற்றோரே கண்ணுடையவர். 'கற்றோரே தேவர் எனப் போற்றப்படத்தக்கவர்; கற்றோரே மேலானவர் என்பதை உணர வேண்டும்.

கல்வி கற்றவன் நல்ல ஆளுமையைப் பெறுகிறான். எல்லா நாட்டுக்கும் சொந்தக்காரன் ஆகிறான். எல்லா மக்களுக்கும் உறவினராகிறான். அறியாமை இருளைப் போக்கி தெளிவுபெறுகிறான். உலகே போற்றும் உயர்வு பெறுகிறான். இக்கூற்றுகளுக்கே எத்தனையோ சான்றோர்களை எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

கல்வியைக் கள்வரால் திருட இயலாது, வெந்தணலில் வேகாது, ஆற்று வெள்ளத்தில் அடித்துச் செல்லாது, அள்ள அள்ளக் குறையாது.

மனிதன் தனது வாழ்நாள் முழுவதும் செய்ய வேண்டிய ஒன்று உண்டு என்றால் அது கல்வி கற்பது ஒன்றுதான். இளமை முதல் இறக்கும் வரை இடைவிடாது கற்றாலும் ஒருவனால் கல்வியில் முழுமை அடைய முடியாது. எனவேதான் 'கற்றது கைம்மண் அளவு. கல்லாதது உலகளவு' என்று கூறப்படுகிறது.

"தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்கு
கற்றனைத்து ஊறும் அறிவு".

மணற்பாங்கான நிலத்தில் இறைக்க இறைக்க நீர் சுரக்கும். அதுபோல அறிவானது கொடுக்கக் கொடுக்க வளர்ந்து கொண்டே இருக்கும். இக்கல்வியை இளமையில் கற்றுத் தெளிய வேண்டும். இளமைப் பருவம் படிப்பதற்கே உரியது. இளவயதில் கற்கும் கல்வியானது 'பசு மரத்தணி போலவும்', 'கல்மேல் எழுத்து போலவும்' அழியாமல் இருக்கும்.




orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 / 8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
For Full Book Order Online and Available at All Leading Bookstores


# அலகு தேர்வு -1

**நேரம் : 60 நிமிடங்கள்** **மதிப்பெண்கள் : 25**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** (3 × 1 = 3)

1. கற்றவருக்கு அழகு தருவது .................... .

அ) தங்கம் ஆ) வெள்ளி

இ) வைரம் ஈ) கல்வி

2. 'கோயிலப்பா' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது .................... .

அ) கோ + அப்பா ஆ) கோயில் + லப்பா

இ) கோயில் + அப்பா ஈ) கோ + இல்லப்பா

3. உடனிகழ்ச்சிப் பொருளில் .................... வேற்றுமை வரும்.

அ) மூன்றாம் ஆ) நான்காம் இ) ஐந்தாம் ஈ) ஆறாம்

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.** (3 × 1 = 3)

4. நீதிநெறி விளக்கம் ........ வெண்பாக்களை உடையது.

5. வாழ்விற்குரிய இன்பத்துறைகளில் தலையாயது ............... இன்பம் ஆகும்.

6. வேற்றுமை ........ வகைப்படும்.

**III. பொருத்துக.** (4 × ½ = 2)

7. மூன்றாம் வேற்றுமை – இராமனுக்குத் தம்பி இலக்குவன்.

8. நான்காம் வேற்றுமை – பாரியினது தேர்.

9. ஐந்தாம் வேற்றுமை – மண்ணால் குதிரை செய்தான்.

10. ஆறாம் வேற்றுமை – ஏவுதல் கலையில் சிறந்தவன் ஏகலைவன்.

**IV. பின்வரும் தொடர்களில் உரிய இடங்களில் நிறுத்தக்குறிகளை இடுக.** (2 ×½ = 1)

11. பூக்கள் நிறைந்த இடம் சோலை ஆகும்

12. திருக்குறள் அறம் பொருள் இன்பம் என்னும் முப்பால் பகுப்பு கொண்டது

**V. பின்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்று வினாக்களுக்கு மூன்று வரிகளில் விடையளிக்கவும்.** (3 × 2 = 6)

13. யாருக்கு அழகு செய்ய வேறு அணிகலன்கள் தேவையில்லை?

14. பகைவர்களிடம் நாம் நடந்துகொள்ள வேண்டிய முறை யாது?

15. தாய்நாடு என்னும் பெயர் எவ்வாறு பிறக்கிறது?

16. ஏழாம் வேற்றுமை சான்றுடன் விளக்குக.

**VI. பின்வரும் வினாக்களுள் எவையேனும் இரண்டு வினாக்களுக்கு ஆறு வரிகளில் விடையளிக்கவும்.** (2 × 3 = 6)

17. கல்வியின் பயன்களாக நீங்கள் கருதுவனவற்றை எழுதுக.

18. புத்தியைத் தீட்டி வாழ வேண்டிய முறைகளாகக் கவிஞர் கூறுவன யாவை?

19. அறிவியல் கல்வி பற்றித் திரு.வி.க. கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

**VII. அடிமாறாமல் எழுதுக.** 4

20. 'கல்வி அழகே அழகு' பாடலைச் செய்யுள் வடிவில் எழுதுக.

☆ ☆ ☆




orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 / 8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
For Full Book Order Online and Available at All Leading Bookstores

குழலினிது யாழினிது

இயல் 2

# திருக்கேதாரம்

கவிதைப்பேழை

## ஆசிரியர் குறிப்பு

சுந்தரர், தேவாரம் பாடிய மூவருள் ஒருவர். இவர் நம்பியாரூரர், தம்பிரான் தோழர் என்னும் சிறப்புப் பெயர்களால் அழைக்கப்படுகிறார். இவர் அருளிய தேவாரப் பாடல்கள் பன்னிரு திருமுறைகளுள் ஏழாம் திருமுறையாக வைக்கப்பட்டுள்ளன. இவர் இயற்றிய திருத்தொண்டத் தொகையை முதல் நூலாகக் கொண்டே சேக்கிழார் பெரியபுராணத்தைப் படைத்தளித்தார்.

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவர் பாடிய பாடல்களின் தொகுப்பே தேவாரம் ஆகும். இந்நூலைத் தொகுத்தவர் நம்பியாண்டவர் நம்பி ஆவார். இந்நூலில் சுந்தரர் பாடியுள்ள கேதாரப்பதிகப் பாடல் ஒன்று இங்குத் தரப்பட்டுள்ளது.

தே + ஆரம் – இறைவனுக்குச் சூட்டப்படும் மாலை என்றும், தே + வாரம் – இனிய இசை பொருந்திய பாடல்கள் எனவும் பொருள் கொள்ளப்படும். பதிகம் என்பது பத்துப் பாடல்களைக் கொண்டது.

## பாடலின் பொருள்

பண்ணோடு சேர்ந்த இனிய தமிழ்ப் பாடல்களைப் பாடும் போது அதற்கு ஏற்றவாறு முதிர்ந்த மூங்கில்களால் ஆகிய புல்லாங்குழலும் முழவும் இணைந்து ஒலிக்கும். கண்களுக்கு இனிய குளிர்ச்சி தரும் ஒளியை உடைய பொன்வண்ண நீர்நிலைகள் வைரங்களைப் போன்ற நீர்த்திவலைகளை வாரி இறைக்கும். நிலத்தின் மீது நின்று கொண்டிருக்கும் மதயானைகள் மணிகளை வாரி வாரி வீசும். இவற்றால் இடையறாது எழும் 'கிண்' என்னும் ஒலியானது இசையாக முழங்கும். இத்தகைய சிறப்புகள் உடைய நகரம் திருக்கேதாரம் ஆகும்.

## மதிப்பீடு

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

**1. காட்டிலிருந்து வந்த .................. கரும்பைத் தின்றன.**

அ) முகில்கள் ஆ) முழவுகள்
இ) வேழங்கள் ஈ) வேய்கள் [விடை: இ) வேழங்கள்]

**2. 'கனகச்சுனை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது .................... .**

அ) கனகச் + சுனை ஆ) கனக + சுனை
இ) கனகம் + சுனை ஈ) கனம் + சுனை

[விடை: இ) கனகம் + சுனை]

**3. முழவு + அதிர என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் .................... .**

அ) முழவுதிர ஆ) முழவுதிரை
இ) முழவதிர ஈ) முழவுஅதிர [விடை: இ) முழவதிர]



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 / 8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
For Full Book Order Online and Available at All Leading Bookstores


(x) இவரது மன உறுதியைக் கண்டு மன்னனும் மனம் மாறி சைவம் தழைக்கப் பாடுபட்டான்.

(xi) 'என் கடன் பணி செய்து கிடப்பதே' எனும் பரந்த நோக்கத்துடன் கையில் உழவாரப்படை ஏந்தி பாழடைந்த கோயில்களைச் செப்பனிட்டு இறைபணி செய்து வந்தார்.

**சுந்தரர் :**

(i) சுந்தரமூர்த்தி நாயனார் திருமுனைப்பாடி நாட்டிலுள்ள திருநாவலூர் எனும் ஊரில் சடையனார் – இசைஞானியார் தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தார். இவர் வாழ்ந்தது கி.பி. எட்டாம் நூற்றாண்டு ஆகும்.

(ii) இவர் ஆதி சைவர் எனும் குலத்தினை சேர்ந்தவர். இவரது இயற்பெயர் நம்பியாரூரன் என்பதாகும். நம்பியாரூரன் என்பதை ஆரூரன் என்று சுருக்கி அழைப்பர்.

(iii) இவர் பாடிய தேவாரங்கள் 7 ஆம் திருமுறையில் சேர்க்கப்பட்டுள்ளன. இவர் இயற்றிய திருத்தொண்டத் தொகை என்னும் நூலில் 60 சிவனடியார்கள் பற்றியும், 9 தொகை அடியார்கள் பற்றியும் குறிப்புகள் உள்ளன. இந்நூலின் துணை கொண்டே சேக்கிழார் பெரியபுராணம் எனும் நூலை இயற்றினார்.

(iv) சுந்தரமூர்த்தி நாயனார் பாடிய பாடல்களை சுந்தரர் தேவாரம் என்று அழைக்கின்றனர். இப்பாடல்களை திருப்பாட்டு என்றும் அழைப்பது வழக்கம். இப்பாடல்களை பன்னிரு திருமுறைகளிலும், தேவாரத்திலும் இணைத்துள்ளார்கள்.

## கூடுதல் வினாக்கள்

**சொல்லும் பொருளும் :**

1. பண் – இசை
2. கனகச்சுனை – பொன் வண்ண நீர்நிலை
3. மதவேழங்கள் – மதயானைகள்
4. முரலும் – முழங்கும்
5. பழவெய் – முதிர்ந்த மூங்கில்

**நிரப்புக :**

1. உயிர்கள் அனைத்தையும் இசைவிப்பது **இசை.**
2. மதயானைகள் **மணிகளை** வாரி வீசும்.
3. சுந்தரரின் சிறப்புப் பெயர்கள் **நம்பியாரூரர், தம்பிரான் தோழர்.**
4. சுந்தரர் அருளிய தேவாரப்பாடல்கள் **ஏழாம்** திருமுறை.
5. சுனை என்பதன் பொருள் **நீர்நிலை.**
6. திருத்தொண்டத் தொகையை முதல் நூலாகக் கொண்டே படைக்கப்பட்ட நூல் **பெரியபுராணம்.**
7. தேவாரத்தைத் தொகுத்தவர் **நம்பியாண்டார் நம்பி**.
8. கேதாரப்பதிகப் பாடலைப் பாடியவர் **சுந்தரர்**.




orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 / 8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
For Full Book Order Online and Available at All Leading Bookstores


**விடையளி :**

**1. தேவாரம் குறிப்பு எழுதுக.**

தே + ஆரம் – இறைவனுக்குச் சூட்டப்படும் மாலை என்றும்

தே + வாரம் – இனிய இசை பொருந்திய பாடல் என்றும் பொருள் கொள்ளப்படும். இந்நூலைத் தொகுத்தவர் நம்பியாண்டார் நம்பி.

**2. தேவாரம் பாடியவர்கள் யாவர்?**

தேவாரம் பாடியவர்கள் மூவர்.

(i) திருஞானசம்பந்தர்

(ii) திருநாவுக்கரசர்

(iii) சுந்தரர்

**3. சுந்தரர் – குறிப்பு எழுதுக.**

(i) சுந்தரர், தேவாரம் பாடிய மூவருள் ஒருவர்.

(ii) இவருடைய சிறப்புப் பெயர் – நம்பியாரூரர், தம்பிரான் தோழர்.

(iii) இவர் அருளிய தேவாரப் பாடல்கள் பன்னிருதிருமுறைகளுள் ஏழாம் திருமுறையாக வைக்கப்பட்டுள்ளன.

☆ ☆ ☆




Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
For Full Book Order Online and Available at All Leading Bookstores


குழலினிது யாழினிது

இயல் 2

# பாடறிந்து ஒழுகுதல்

கவிதைப்பேழை

## நூல் வெளி

கலித்தொகை எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று. இது கலிப்பா என்னும் பாவகையால் ஆன நூல். நூற்று ஐம்பது பாடல்களைக் கொண்டது. குறிஞ்சிக்கலி, முல்லைக்கலி, மருதக்கலி, நெய்தற்கலி என்னும் ஐந்து பிரிவுகளை உடையது. கலித்தொகையைத் தொகுத்த நல்லந்துவனார் சங்ககாலப் புலவர்களுள் ஒருவர். நெய்தற்கலிப் பாடல்களை இயற்றிவரும் இவரே.

## பாடலின் பொருள்

இல்வாழ்வு என்பது வறியவர்க்கு உதவி செய்தல். பாதுகாத்தல் என்பது அன்புடையோரைப் பிரியாது வாழ்தல். பண்பு எனப்படுவது சான்றோர் காட்டிய வழியில் நடத்தல். அன்பு எனப்படுவது உறவினர்களோடு வெறுப்பின்றி வாழ்தல். அறிவு எனப்படுவது அறிவற்றவர் கூறும் சொற்களைப் பொறுத்தல். செறிவு எனப்படுவது முன் சொன்ன வாக்கை மறுக்காமல் காப்பாற்றுதல். நிறை எனப்படுவது மறைபொருளைப் பிறர் அறியாமல் காத்தல். நீதிமுறை எனப்படுவது குற்றம் செய்தவருக்கு உரிய தண்டனை வழங்குதல். பொறுமை எனப்படுவது தம்மை இகழ்வாரையும் பொறுத்தல். நாம் ஒவ்வொருவரும் இத்தகைய பண்புநலன்களைப் பின்பற்றி வாழவேண்டும்.

## மதிப்பீடு

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. **பசியால் வாடும் ................ உணவளித்தல் நமது கடமை.**

அ) பிரிந்தவர்க்கு ஆ) அலந்தவர்க்கு

இ) சிறந்தவர்க்கு ஈ) உயர்ந்தவருக்கு

[விடை: ஆ) அலந்தவர்க்கு]

2. **நம்மை ..............ப் பொறுத்துக் கொள்ள வேண்டும்.**

அ) இகழ்வாரை ஆ) அகழ்வாரை

இ) புகழ்வாரை ஈ) மகிழ்வாரை

[விடை: அ) இகழ்வாரை]

3. **மறைபொருளைக் காத்தல் .................. எனப்படும்.**

அ) சிறை ஆ) அறை

இ) கறை ஈ) நிறை

[விடை: ஈ) நிறை]




orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 / 8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
For Full Book Order Online and Available at All Leading Bookstores


குழலினிது யாழினிது

# இயல் 2 நாட்டுப்புறக் கைவினைக் கலைகள்

உரைநடை உலகம்

## மதிப்பீடு

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. பழந்தமிழ் இலக்கியங்களைப் பாதுகாத்து வைத்தவை ........................ .

அ) கல்வெட்டுகள் ஆ) செப்பேடுகள்
இ) பனையோலைகள் ஈ) மண்பாண்டங்கள்

[விடை: இ) பனையோலைகள்]

2. பானை ..................... ஒரு சிறந்த கலையாகும்.

அ) செய்தல் ஆ) வனைதல்
இ) முடைதல் ஈ) சுடுதல் [விடை: ஆ) வனைதல்]

3. 'மட்டுமல்ல' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது .............. .

அ) மட்டு + மல்ல ஆ) மட்டம் + அல்ல
இ) மட்டு + அல்ல ஈ) மட்டும் + அல்ல [விடை: ஈ) மட்டும் + அல்ல]

4. கயிறு + கட்டில் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் .............. .

அ) கயிற்றுக்கட்டில் ஆ) கயிர்க்கட்டில்
இ) கயிறுக்கட்டில் ஈ) கயிற்றுகட்டில் [விடை: அ) கயிற்றுக்கட்டில்]

### பின்வரும் சொற்களைச் சொற்றொடரில் அமைத்து எழுதுக

1. முழுவதும் – தொழிலாளி நாள் முழுவதும் உழைப்பார்.
2. மட்டுமல்லாமல் – புயல் காற்று வீசியதில் செடிகொடிகள் மட்டுமல்லாமல் மரங்களும் வீழ்ந்தன.
3. அழகுக்காக – முகத்தின் அழகுக்காக இயற்கைக் களிம்புகளை மட்டும் பயன்படுத்தலாம்.
4. முன்பெல்லாம் – மாணவர்களுக்கு முன்பெல்லாம் ஓடியாடி விளையாடுவதற்கு நேரம் இருந்தது.




orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 / 8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
For Full Book Order Online and Available at All Leading Bookstores


## கற்பவை கற்றபின்

1. **உங்கள் பகுதியில் கிடைக்கும் களிமண், பனையோலை போன்ற பொருள்களைப் பயன்படுத்திக் கைவினைப்பொருள்களைச் செய்து காட்சிப்படுத்துக.**

மாணவர்கள் தாங்களாகவே செய்ய வேண்டியவை.

2. **பனையோலையால் செய்யப்படும் பல்வேறு கைவினைப்பொருள்களின் படங்களைச் சேகரித்துப் படத்தொகுப்பு உருவாக்குக.**






## கூடுதல் வினாக்கள்

**நிரப்புக :**

1. சிந்து சமவெளி அகழாய்வில் கிடைத்தவை __பானை ஓடுகள்__.
2. ஆதிச்சநல்லூரில் கிடைத்தவை __முதுமக்கள்__ தாழிகள்.
3. செம்பியன் கண்டியூரில் கண்டுபிடிக்கப்பட்டவை __மண்கலங்கள்__.




orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 / 8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
For Full Book Order Online and Available at All Leading Bookstores


## கற்பவை கற்றபின்

**1. இசைக்கருவிகளின் படங்களைத் திரட்டிப் படத்தொகுப்பு உருவாக்குக.**


குடமுழா


உடுக்கை


மத்தளம்


வீணை

**2. இக்கால இசைக்கருவிகள் குறித்துக் கலைக்களஞ்சிய வடிவில் செய்திகளைத் தொகுத்து எழுதுக.**

**கித்தார் அல்லது கிட்டார் :**

இது அதிர்கம்பிகள் கொண்ட ஒரு, நரம்பு இசைக்கருவி ஆகும். கித்தார் மிகவும் பிரபலமான இசைக்கருவி. இதில் உள்ள வெவ்வேறான தடிமன் கொண்ட நரம்புகளை மீட்டுவதன் மூலம் இசை பிறக்கும். பொதுவான கித்தார் ஆறு தந்திகள் உடையது. அடித்தொனிக் கித்தார்கள் நான்கு தந்திகளைக் கொண்டவை.

**பியானோ – கின்னரப்பெட்டி :**

பியானோ என்பது வதிப்பலகையால் வாசிக்கப்படும் இசைக்கருவி. பெரிதாக மேற்கத்திய இசையில் தனித்து வாசிப்பதற்கும் அறையிசையில் வாசிப்பதற்கும், துணைக் கருவியாக வாசிப்பதற்குமே பயன்படுத்தப்படுகிறது.

**தபேலா (கைம்முரசு இணை) :**

இது இந்துஸ்தானி இசையில் மிக முக்கியமான தாள வாத்தியம். தற்போது தென்னிந்தியாவில் பக்திப் பாடல், மெல்லிசைப் பாடல், பஜனைப் பாடல் ஆகியவற்றில் கைம்முரசு இணை பக்கவாத்தியமாக வாசிக்கப்படுகிறது.

☆☆☆




orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 / 8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
For Full Book Order Online and Available at All Leading Bookstores


குழலினிது யாழினிது

# இயல் 2 தொகைநிலை, தொகாநிலைத் தொடர்கள்

கற்கண்டு

## மதிப்பீடு

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. **சொற்களுக்கு இடையே வேற்றுமை உருபு மறைந்து வருவது ............. .**

அ) வேற்றுமைத்தொகை ஆ) உம்மைத்தொகை
இ) உவமைத்தொகை ஈ) அன்மொழித்தொகை

[விடை: அ) வேற்றுமைத்தொகை]

2. **'செம்மரம்' என்னும் சொல் ..................... த்தொகை.**

அ) வினை ஆ) பண்பு
இ) அன்மொழி ஈ) உம்மை [விடை: ஆ) பண்பு]

3. **'கண்ணா வா!' – என்பது ...........................த் தொடர்.**

அ) எழுவாய் ஆ) விளி
இ) வினைமுற்று ஈ) வேற்றுமை [விடை: ஆ) விளி]

### பொருத்துக

1. பெயரெச்சத் தொடர் – கார்குழலி படித்தாள்.
2. வினையெச்சத் தொடர் – புலவரே வருக.
3. வினைமுற்றுத் தொடர் – பாடி முடித்தான்.
4. எழுவாய்த் தொடர் – எழுதிய பாடல்.
5. விளித் தொடர் – வென்றான் சோழன்.

விடை :

1. பெயரெச்சத் தொடர் – எழுதிய பாடல்.
2. வினையெச்சத் தொடர் – பாடி முடித்தான்.
3. வினைமுற்றுத் தொடர் – வென்றான் சோழன்.
4. எழுவாய்த் தொடர் – கார்குழலி படித்தாள்.
5. விளித் தொடர் – புலவரே வருக.


orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 / 8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

## கடிதம் எழுதுக

**இருப்பிடச் சான்று வேண்டி வட்டாட்சியருக்கு விண்ணப்பம் எழுதுக.**

**விடுநர் :**

கவிதா ம.
எண். 15, முத்தம்மன் கோவில் தெரு,
சாய்நாதபுரம்,
வேலூர்.

**பெறுநர் :**

உயர்திரு வட்டாட்சியர் அவர்கள்,
வட்டாட்சியர் அலுவலகம்,
வேலூர்.

மதிப்பிற்குரிய ஐயா,

**பொருள் :** இருப்பிடச் சான்று வேண்டி.

வணக்கம். நான் மேலே குறிப்பிட்ட முகவரியில் பத்து ஆண்டுகளாகக் குடும்பத்துடன் இருக்கிறேன். நான் படிக்கும் பள்ளியில் என் இருப்பிடம் பற்றிய விவரத்தைக் கேட்கின்றனர். ஆதலால் நான் இம்முகவரியில்தான் வசிக்கிறேன் என்பதற்கான இருப்பிடச் சான்றிதழ் வழங்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி!

இணைப்பு :

1. குடும்ப அட்டை நகல்

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள
கவிதா ம.

உறைமேல் முகவரி

| | |
|---|---|
| பெறுநர்<br>உயர்திரு வட்டாட்சியர் அலுவலகம்,<br>வட்டாட்சியர் அலுவலகம்,<br>வேலூர். | அஞ்சல் தலை |

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
For Full Book Order Online and Available at All Leading Bookstores


வாழ்வியல்

இயல் 2

# திருக்குறள்

## நூல் வெளி



பெருநாவலர், முதற்பாவலர், நாயனார் முதலிய பல சிறப்புப் பெயர்களால் குறிக்கப்படும் திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவர் என்பர்.

திருக்குறள் உலகின் பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட சிறந்த நூல் ஆகும். இந்நூல் அறம், பொருள், இன்பம் என்னும் முப்பால் பகுப்புக் கொண்டது. அறத்துப்பால் பாயிரவியல், இல்லறவியல், துறவறவியல், ஊழியல் என்னும் நான்கு இயல்களைக் கொண்டது. பொருட்பால் அரசியல், அமைச்சியல், ஒழிபியல் என்னும் மூன்று இயல்களைக் கொண்டது. இன்பத்துப்பால் களவியல், கற்பியல் என்னும் இரண்டு இயல்களைக் கொண்டது.

## தெரிந்து வினையாடல்

1. **செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோடு
எய்த உணர்ந்து செயல்.**

**தெளிவுரை** : செயலாற்றும் திறன் உடையவரையும் செய்ய வேண்டிய செயலையும் செய்வதற்குரிய காலத்தையும் ஆராய்ந்து அச்செயலை நிறைவேற்ற வேண்டும்.

2. **இதனை இதனால் இவன்முடிக்கும் என்றுஆய்ந்து
அதனை அவன்கண் விடல்.**

**தெளிவுரை** : இச்செயலை இந்த வகையால் இவர் செய்து முடிப்பார் என்று ஆராய்ந்து அச்செயலை அவரிடம் ஒப்படைக்க வேண்டும்.

## செங்கோன்மை

3. **ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்
தேர்ந்துசெய் வஃதே முறை.**

**தெளிவுரை** : எதையும் நன்கு ஆராய்ந்து ஒரு பக்கம் சாயாது நடுவுநிலையில் நின்று நடத்துவதே சிறந்த ஆட்சியாகும்.

4. **இறைகாக்கும் வையகம் எல்லாம் அவனை
முறைகாக்கும் முட்டாச் செயின்**

**தெளிவுரை** : உலகத்து உயிர்களை எல்லாம் அரசர் காப்பாற்றுவார். அவரை அவரது குற்றமற்ற ஆட்சி காப்பற்றும்.

## வெருவந்த செய்யாமை

5. **தக்காங்கு நாடித் தலைசெல்லா வண்ணத்தால்
ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து.**

**தெளிவுரை** : ஒருவர் செய்த குற்றத்தை முறையாக ஆராய்ந்து அவர் மீண்டும் குற்றம் செய்யாதவாறு தண்டிப்பது அரசனின் கடமையாகும்.

குறளினிது யாழினிது


orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 / 8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
For Full Book Order Online and Available at All Leading Bookstores


## அலகு தேர்வு -2

**நேரம் : 60 நிமிடங்கள்** **மதிப்பெண்கள் : 25**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** (3 × 1 = 3)

1. காட்டிலிருந்து வந்த ................. கரும்பைத் தின்றன.

அ) முகில்கள் ஆ) முழவுகள்

இ) வேழங்கள் ஈ) வேய்கள்

2. நம்மை .............ப் பொறுத்துக் கொள்ள வேண்டும்.

அ) இகழ்வாரை ஆ) அகழ்வாரை

இ) புகழ்வாரை ஈ) மகிழ்வாரை

3. 'கண்ணோடாது' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது .............. .

அ) கண் + ஓடாது ஆ) கண் + ணோடாது

இ) க + ஓடாது ஈ) கண்ணோ + ஆடாது

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.** (3 × 1 = 3)

4. தேவாரத்தைத் தொகுத்தவர் ................

5. வறியவர்களுக்கு உதவி செய்தல் என்பது ................

6. 'நனி நின்று' என்பது ................ தொடர்.

**III. பொருத்துக.** (4 × ½ = 2)

7. பெயரெச்சத் தொடர் – கார்குழலி படித்தாள்
8. வினையெச்சத் தொடர் – எழுதிய பாடல்
9. வினைமுற்றுத் தொடர் – வென்றான் சோழன்
10. எழுவாய்த் தொடர் – பாடி முடித்தான்

**IV. பின்வரும் சொற்களைச் சொற்றொடரில் அமைத்து எழுதுக.** (2 × ½ = 1)

11. முழுவதும் –
12. மட்டுமல்லாமல் –

**V. பின்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்று வினாக்களுக்கு மூன்று வரிகளில் விடையளிக்கவும்.** (3 × 2 = 6)

13. பண்பு, அன்பு ஆகியவை பற்றிக் கலித்தொகை கூறுவன யாவை?
14. எவற்றையெல்லாம் கைவினைக்கலைகள் எனக் கூறுகிறோம்?
15. இரவுபகல் என்பது எவ்வகைத் தொடர் என விளக்குக.
16. அரசன் தண்டிக்கும் முறை யாது?

**VI. பின்வரும் வினாக்களுள் எவையேனும் இரண்டு வினாக்களுக்கு ஆறு வரிகளில் விடையளிக்கவும்.** (2 × 3 = 6)

17. திருக்கேதாரத்தைச் சுந்தரர் எவ்வாறு வருணனை செய்கிறார்?
18. வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய பண்பு நலன்களாக நீங்கள் கருதுவன யாவை?
19. மூங்கிலால் செய்யப்படும் பொருள்கள் குறித்து எழுதுக.

**VII. அடிமாறாமல் எழுதுக.** 4

20. 'பாடறிந்து ஒழுகுதல்' பாடலைச் செய்யுள் வடிவில் எழுதுக.

☆ ☆ ☆




orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 / 8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
For Full Book Order Online and Available at All Leading Bookstores



இயல் 3

# வளம் பெருகுக

கவிதைப்பேழை

## ஆசிரியர் குறிப்பு

ஆசிரியர் பெயர் அறிய முடியாத நூல்களுள் ஒன்று தகடூர் யாத்திரை. தகடூர் இன்று தர்மபுரி என்று அழைக்கப்படுகிறது. இந்நூல் முழுமையாகக் கிடைக்கவில்லை. இந்நூலின் சில பாடல்கள் புறத்திரட்டு என்னும் தொகுப்பு நூலில் கிடைக்கின்றன.

## பாடலின் பொருள்

சேர மன்னரின் அகன்ற பெரிய நாட்டில் பெருகிய மழைநீரால் வருவாய் சிறந்து விளங்குக. அகன்ற நிலப்பகுதியில் இவ்விதைகள் குறைவின்றி முளைவிடுக. முளைத்த விதைகள் செழிப்புடன் வளரத் தட்டுப்பாடின்றி மழை பொழிக. தகுந்த காலத்தில் மழை பொழிவதால் பயிர்கள் வாட்டமின்றிக் கிளைத்து வளர்க. கிளைத்துச் செழித்த பயிர்கள் பால்முற்றிக் கதிர்களை ஈனுக. அக்கதிர்கள் அறுவடை செய்யப் பெற்று ஏரினால் வளம் சிறக்கும் செல்வர்களின் களத்தில் வந்து நிறைக. அக்களத்தில் வந்து நிறைந்துள்ள நெற்போர் காவல் இன்றியே விளங்குக. போரினை அடித்து நெல்லினைக் கொள்ளும் காலத்தில் உழவர்கள் எழுப்பும் ஆரவார ஒலியால் நாரை இனங்கள் அஞ்சித் தம் பெண் பறவைகளோடு பிரிந்து செல்லும் சிறப்புடைய சேர மன்னரின் அகன்ற பெரிய நாடு புதுவருவாயுடன் சிறந்து விளங்குக.

## மதிப்பீடு

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

**1. தோட்டத்தில் தம்பி ஊன்றிய .................... எல்லாம் முளைத்தன.**

அ) சத்துகள் ஆ) பித்துகள்
இ) முத்துகள் ஈ) வித்துகள் **[விடை: ஈ) வித்துகள்]**

**2. என் நண்பன் செய்த தொழிலில் அவனுக்கு .................... பெருகிற்று.**

அ) காரி ஆ) ஓரி
இ) வாரி ஈ) பாரி

**[விடை: இ) வாரி]**

**3. 'அக்களத்து' என்ற சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது .................... .**

அ) அ + களத்து ஆ) அக் + களத்து
இ) அக்க + அளத்து ஈ) அம் + களத்து **[விடை: அ) அ + களத்து]**



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 / 8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
For Full Book Order Online and Available at All Leading Bookstores


வையம்புகழ் வணிகம்

இயல் 3

# மழைச்சோறு

கவிதைப்பேழை

## நூல் வெளி

பழந்தமிழர் வழிபாட்டு மரபுகள் என்னும் நூலில் உள்ள கொங்குநாட்டு 'மழைச்சோற்று வழிபாடு' என்னும் கட்டுரையிலிருந்து இப்பாடல் எடுக்கப்பட்டுள்ளது. இந்நூலின் பதிப்பாசிரியர் அ. கௌரன்.

## தெரிந்து தெளிவோம்

மழை பெய்யாமல் ஊரில் பஞ்சம் ஏற்படும் காலங்களில், சிற்றூர் மக்கள் ஒவ்வொரு வீடாகச் சென்று உப்பில்லாச் சோற்றை ஒரு பானையில் வாங்குவர். ஊர்ப் பொது இடத்தில் வைத்து அச்சோற்றை அனைவரும் பகிர்ந்து உண்பர். கொடிய பஞ்சத்தைக் காட்டும் அடையாளமாக நிகழும் இதனைக் கண்டு வானம் மனமிரங்கி மழை பெய்யும் என்பது மக்களின் நம்பிக்கை. இந்நிகழ்வை மழைச்சோற்று நோன்பு என்பர்.

## மதிப்பீடு

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. கனத்த மழை என்னும் சொல்லின் பொருள் ................ .

அ) பெருமழை ஆ) சிறு மழை
இ) எடைமிகுந்த மழை ஈ) எடை குறைந்த மழை

[விடை: அ) பெருமழை]

2. 'வாசலெல்லாம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ............. .

அ) வாசல் + எல்லாம் ஆ) வாசல் + எலாம்
இ) வாசம் + எல்லாம் ஈ) வாசு + எல்லாம்

[விடை: அ) வாசல் + எல்லாம்]

3. 'பெற்றெடுத்தோம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ............ .

அ) பெறு + எடுத்தோம் ஆ) பேறு + எடுத்தோம்
இ) பெற்ற + எடுத்தோம் ஈ) பெற்று + எடுத்தோம்

[விடை: ஈ) பெற்று + எடுத்தோம்]

4. கால் + இறங்கி என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ............ .

அ) கால்லிறங்கி ஆ) காலிறங்கி
இ) கால் இறங்கி ஈ) கால்றங்கி

[விடை: ஆ) காலிறங்கி]

வையம்புகழ் வணிகம்


Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
For Full Book Order Online and Available at All Leading Bookstores


வையம்புகழ் வணிகம்

இயல் 3

# கொங்குநாட்டு வணிகம்

உரைநடை உலகம்

## மதிப்பீடு

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. 'வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு' என்று குறிப்பிடும் நூல் ........................ .
அ) தொல்காப்பியம் ஆ) அகநானூறு
இ) புறநானூறு ஈ) சிலப்பதிகாரம்
[விடை: அ) தொல்காப்பியம்]

2. சேரர்களின் தலைநகரம் .................... .
அ) காஞ்சி ஆ) வஞ்சி
இ) தொண்டி ஈ) முசிறி [விடை: ஆ) வஞ்சி]

3. பழங்காலத்தில் விலையைக் கணக்கிட அடிப்படையாக அமைந்தது ............ .
அ) புல் ஆ) நெல்
இ) உப்பு ஈ) மிளகு [விடை: ஆ) நெல்]

4. ஆன்பொருநை என்று அழைக்கப்படும் ஆறு ................ .
அ) காவிரி ஆ) பவானி
இ) நொய்யல் ஈ) அமராவதி [விடை: ஈ) அமராவதி]

5. வீட்டு உபயோகப் பொருள்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் நிறைந்த மாவட்டம் ................ .
அ) நீலகிரி ஆ) கரூர்
இ) கோயம்புத்தூர் ஈ) திண்டுக்கல் [விடை: இ) கோயம்புத்தூர்]

### கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. 'மாங்கனி நகரம்' என்று அழைக்கப்படும் நகரம். [விடை: சேலம்]
2. சுங்குடிச் சேலைகளுக்குப் புகழ்பெற்ற ஊர் ................ . [விடை: சின்னாளபட்டி]
3. சேரர்களின் நாடு .............. எனப்பட்டது. [விடை: குடகு]
4. பின்னலாடை நகரமாக .............. விளங்குகிறது. [விடை: திருப்பூர்]


Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
For Full Book Order Online and Available at All Leading Bookstores


வையம்புகழ் வணிகம்

# இயல் 3 காலம் உடன் வரும்

விரிவானம்

## மதிப்பீடு

**1. 'காலம் உடன் வரும்' – கதையைச் சுருக்கி எழுதுக.**

**முன்னுரை :**

துணிகளை நெய்து துறைமுகத்தில் சேர்க்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் அனந்திகா நிறுவனம் சிக்கிக் கொண்டது. இச்சிக்கலை சுப்பிரமணி எவ்வாறு தீர்த்து வைத்தான் என்பதனையும் அதற்கு உதவிய நெசவுத் தொழிலாளரின் உணர்வுகளையும் வெளிப்படுத்தும் கதையைப் பார்க்கலாம்.

**சுப்பிரமணியனின் கவலை :**

தறியில் பாவு தீர்ந்துவிட்டால், அடுத்த பாவு பிணைக்க ஆளில்லை. ரங்கன் என்பவர் ஊரில் இல்லை. என்ன செய்வதென்று தெரியாமல் சுப்பிரமணி நண்பன் ரகுவைப் பார்க்கச் சென்றார். அவருடைய தறியில் வேலை செய்கிறவர்களை உதவிக்கு அனுப்புமாறு கேட்டார். அங்கும் ஆள் இல்லை என அறிந்ததும் கவலை அதிகமானது.

**ரகுவின் ஆலோசனை :**

சுப்பிரமணியின் கவலையை உணர்ந்த ரகு, மாயழகு என்பவரைப் போய்ப் பார்த்து, அவரது மனைவியை அழைத்துப் போகச் சொன்னார். இரவு நேரத்தில் செல்வதற்குத் தயங்கியவன் பிறகு வேறுவழியின்றி அப்பெண்மணியை அழைத்துச் சென்றார்.

**ஒச்சம்மா :**

சுப்பிரமணி பாவு பிணைக்க ஒச்சம்மாவைப் பட்டறைக்குக் காரில் அழைத்துச் சென்றார். குழந்தையைத் தூங்க வைத்துவிட்டு பாவு பிணைக்கத் தொடங்கினாள். அவள் உசிலம்பட்டி பக்கமுள்ள கிருஷ்ணாபுரத்தைச் சார்ந்தவள். மாயழகு கோம்பைத்தொழுவு என்ற ஊரைச் சார்ந்தவன். எதிர்கால நலன் கருதி வெள்ளக்கோயிலில் குடியேறினர். புதிய இடத்தில் அவளுக்கு உணவு, காற்று, நீர், ஒப்பனை எல்லாமும் மாற வேண்டியிருந்தது.

**நெசவுத் தொழிலில் ஒச்சம்மா :**

இயந்திர நேர்த்தி அதிகம் கொண்ட தறித்தொழிலில் பாவு பிணைத்தல், ஒடி எடுத்தல், கோன் போடுதல், எல்லாவற்றையும் சில மாதங்களில் கற்றுக்கொண்டாள். தன் குழந்தையின் கல்வியைப் பற்றி சிந்தித்து இடம் விட்டு இடம் எங்கும் மாறக்கூடாது என்று தீர்மானித்தாள்.

**பாவு பிணைத்தல் :**

மனதில் பலவற்றை எண்ணியபடியே பாவு பிணைந்து கொண்டிருந்தாள். இடையில் அழுத குழந்தைக்குப் பாலூட்டித் தூங்க வைத்தாள். பாவு பிணைப்பின் வேகம் குறைந்ததைப் பார்த்த சுப்பிரமணி தேநீர் வாங்கிவரச் சொல்லிக் கொடுத்தார். தறியில் பணி செய்ய மாணிக்கத்தையும் துரிதப்படுத்தினார் சுப்பிரமணி. ஒச்சம்மாவும் தேநீர் அருந்திவிட்டு சுறுசுறுப்பாக பாவு பிணைந்து முடிந்தாள்.


Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
For Full Book Order Online and Available at All Leading Bookstores


**இடமிருந்து வலம்**

1. சிவகாசி
5. திருபாச்சி
7. திருநெல்வேலி
12. கோவில்பட்டி

**வலமிருந்து இடம்**

3. மதுரை
4. பண்ருட்டி
9. தஞ்சாவூர்
10. மணப்பாறை

**மேலிருந்து கீழ்**

1. காஞ்சிபுரம்
2. சேலம்
4. பழனி

**கீழிருந்து மேல்**

6. தூத்துக்குடி
8. ஸ்ரீவில்லிப்புத்தூர்
11. திண்டுக்கல்

## விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 ப | ட் | டா | சு | | | 2 மா | | | |
| ட் | | டி | க | ங் | 3 சு | ம் | பு | | |
| டு | | | | ம் | ழ | ப | ப் | லா | 4 ப |
| நெ | 5 அ | ரி | வா | ள் | | ழ | 6 உ | | ஞ் |
| ச | | | கோ | | | ம் | | | சா |
| வா | | 7 அ | ல் | வா | | | | | மி |
| லை | | | 8 பா | | | டு | | | ர் |
| | | மை | ம் | பொ | டி | ட் | யா | லை | 9 த |
| கு | க் | று | 10 மு | | | 11 பூ | | | ம் |
| 12 க | ட | லை | மி | ட் | டா | ய் | | | |

## நிற்க அதற்குத் தக

**என் பொறுப்புகள்...**

1. கைத்தொழில் ஒன்றைக் கற்றுத் தெளிவேன்.
2. நெசவுத் தொழிலின் சிறப்பை அறிந்து போற்றுவேன்.

### கலைச்சொல் அறிவோம்

| | | | |
|---|---|---|---|
| 1. நூல் | Thread | 5. தையல் | Stitch |
| 2. தறி | Loom | 6. ஆலை | Factory |
| 3. பால்பண்ணை | Dairy farm | 7. சாயம் ஏற்றுதல் | Dyeing |
| 4. தோல் பதனிடுதல் | Tanning | 8. ஆயத்த ஆடை | Readymade Dress |

☆ ☆ ☆




orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 / 8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
For Full Book Order Online and Available at All Leading Bookstores


# அலகு தேர்வு -3

**நேரம் : 60 நிமிடங்கள்** **மதிப்பெண்கள் : 25**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** (3 × 1 = 3)

1. என் நண்பன் செய்த தொழிலில் அவனுக்கு .................. பெருகிற்று.

அ) காரி ஆ) ஓரி இ) வாரி ஈ) பாரி

2. 'வாசலெல்லாம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ............ .

அ) வாசல் + எல்லாம் ஆ) வாசல் + எலாம்
இ) வாசம் + எல்லாம் ஈ) வாசு + எல்லாம்

3. ஆன்பொருநை என்று அழைக்கப்படும் ஆறு ............... .

அ) காவிரி ஆ) பவானி
இ) நொய்யல் ஈ) அமராவதி

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.** (3 × 1 = 3)

4. 'பழந்தமிழர் வழிபாட்டு மரபுகள்' என்னும் நூலின் பதிப்பாசிரியர் .......................
5. சேரர்களின் நாடு .............. எனப்பட்டது.
6. விகாரப்புணர்ச்சி ............. வகைப்படும்.

**III. பொருத்துக.** (4 × ½ = 2)

7. மட்பாண்டம் – தோன்றல் விகாரம்.
8. மரவேர் – இயல்புப் புணர்ச்சி
9. மணிமுடி – கெடுதல் விகாரம்
10. கடைத்தெரு – திரிதல் விகாரம்

**IV. பின்வரும் மரபுத்தொடர்களைத் தொடரில் அமைத்து எழுதுக.** (2 × ½ = 1)

11. வாழையடி வாழையாக –
12. முதலைக்கண்ணீர் –

**V. பின்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்று வினாக்களுக்கு மூன்று வரிகளில் விடையளிக்கவும்.** (3 × 2 = 6)

13. உழவர்கள் எப்போது ஆரவார ஒலி எழுப்புவர்?
14. மக்கள் ஊரைவிட்டு வெளியேறக் காரணம் என்ன?
15. 'தமிழ்நாட்டின் ஹாலந்து' என்று அழைக்கப்படும் ஊர் எது? ஏன்?
16. விகாரப் புணர்ச்சி என்றால் என்ன?

**VI. பின்வரும் வினாக்களுள் எவையேனும் இரண்டு வினாக்களுக்கு ஆறு வரிகளில் விடையளிக்கவும்.** (2 × 3 = 6)

17. உழவுத்தொழில் சிறக்க இன்றியமையாதனவாக நீங்கள் கருதுவன யாவை?
18. மழை வளம் பெருக நாம் செய்ய வேண்டுவன யாவை?
19. இயல்பு புணர்ச்சியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

**VII. கட்டுரை எழுதுக.** 4

20. 'கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்'

☆ ☆ ☆




orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 / 8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com
www.surabooks.com